தேவனின் அன்பு ஊழியங்கள்

# மங்கள வார்த்தை

GOD'S LOVES MINISTRIES - VOL-II-(ISSUE-3) - மாத இதழ் - மார்ச் - 2021



# எல்லாம் நிறைவேறிற்று

**மனம்திறந்து சில வார்த்தைகள்...** 03
Bro. T. Stephen, Founder, God's Love Ministries

**இம்மாத மங்கள வார்த்தை: எல்லாம் நிறைவேறிற்று!** 04
Bro. T. Stephen, Founder, God's Love Ministries

**"ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனை!** 09
Sis. Josephin Stephen, Editor "Mangala Vaarthai"

**பெண்கள் பகுதி: கிறிஸ்து ஏன் காயப்பட்டார்?** 11
Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai"

**வேத வினா போட்டி** 13
Bible Quiz - (Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai")

**ஆண்டவரின் அற்புதங்கள்** 14
(Testimonies)

**மார்வெல் திருமண தகவல் மையம்** 16
(Marvel Matrimony)

**சிறுவர்கள் பகுதி/குட்டீஸ் ஸ்பெஷல்: ஏமாற்றி வாழாதே!** 17
Children's Special - Sis. Steffy Stephen, God's Love Ministries, Chennai

**வாலிபர் பகுதி: ஜெபத்தின் முக்கியத்துவம்!** 19
Youth Special - Sis. Bavya Deril, God's Love Ministries, Chennai

**தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்** 22
(Schedule of TV Ministry)

**எங்கள் சேவைகள்** 24
(Our Services)

# மனம் திறந்து
## சில வார்த்தைகள்...



**கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,**

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

தேவனுடைய பெரிய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஊக்கமான ஜெபங்களினாலும் சென்னையில் நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகையிலும் (பிப்ரவரி 6), நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற "கூடலூர் விடுதலைப் பெருவிழாவிலும்" (பிப்ரவரி 13 மற்றும் 14) செங்கல்பட்டில் (வல்லம்) நடைபெற்ற "அக்கினி அற்புதத்தின் கூட்டங்கள் 2021-லும்" (பிப்ரவரி 20 மற்றும் 21), சென்னை மேடவாக்கத்தில் அமைந்துள்ள மகனாயீம் எழுப்புதல் ஜெப வீட்டின் திறப்பு விழாவிலும் (பிப்ரவரி 22), சென்னை, கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள ஏலிம் மகிமையின் தேவாலயத்தில் நடைபெற்ற "சிலுவை தியானக் கூட்டங்களிலும்" (பிப்ரவரி 27 மற்றும் 28) ஆண்டவர் அடிமையை வல்லமையாக பயன்படுத்தினார்! இக்கூட்டங்களில் ஆண்டவர் எண்ணி முடியாத அற்புதங்களை செய்தருளி, தான் இன்றைக்கும் ஜீவிக்கிறேன் என்பதை நிரூபித்தார்! தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்! உங்கள் ஜெபமே எங்கள் பெலன்!

பிறந்திருக்கிற இந்த புதிய மாதம் எல்லாவிதத்திலும் உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும்படி உங்களை வாழ்த்துகிறேன், உங்களுக்காக ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்து இந்த உலகில் இருந்த நாட்களில் நமக்காக எல்லாவற்றையும் சிலுவையிலே செய்து முடித்தார். அவருடைய பரிபூரணத்தினால் நாம் கிருபையின்மேல் கிருபை பெற்றோம் (யோவான் 1:16) அந்த தேவ கிருபை எப்பொழுதும் உங்களோடு இருக்கிறபடியால், இந்த உலகின் அசுத்தங்கள் பாவங்கள், துக்கங்கள், வேதனைகள் ஒருபோதும் உங்களை மேற்கொள்வதில்லை (ரோமர் 6:14)

**"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 6:14).**

என்ற வேத வசனத்தின்படி, இந்த லெந்து நாட்களிலே பரிசுத்தமாய் வாழ நம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுப்போம்! ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம்! கிறிஸ்துவின் சாயலை நம்மில் உருவாக்குவோம்!

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்..." (ஏசாயா40:31)**

என்ற வேத வசனத்தை உறுதியாய் பிடித்துகொண்டு, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போம் (1 பேதுரு 2:21), ஆவிக்குரிய வாழ்வில் புது பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவோம்!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(T. STEPHEN)
நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்

*மார்ச் மாத*

# மங்கள வார்த்தை:





(சகோ. T.ஸ்டீபன், நிறுவனர்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

# எல்லாம் நிறைவேறிற்று

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர – சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

இந்த நாளிலும் மார்ச் மாத பரலோக மங்கள வார்த்தையோடு உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த 'எல்லாம் நிறைவேறிற்று' என்ற மங்கள வார்த்தையை நீங்கள் வாசிக்கும்போது, உங்கள் குடும்பத்தின் கட்டுகளும், நுகங்களும் முறிக்கப்படும். உங்கள் பாடுகள், கண்ணீர்கள், வேதனைகள், துக்கங்கள் யாவும் தானாக மாறும். ஆண்டவர் புதிய வழிகளை உங்களுக்குத் திறந்து கொடுப்பதோடு, உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் தம்முடைய சிலுவை சுமந்த தோளில் வைத்து, ஆசீர்வாதத்திற்கு நேராக சுமந்து செல்லுவார்! ஆகவே இந்த லெந்து நாட்களில் விசுவாசத்தோடு வாசியுங்கள். அற்புதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

உங்களுக்காக நான் ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருந்தபோது அவர் கொடுத்த மங்கள வார்த்தையின் மூல வசனம்:

**"அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம்நிறைவேறத்தக்கதாக. தாகமாயிருக்கிறேன் என்றார். இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்' (யோவான் 19,28,30).**

இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்வில் உங்களுக்காக, எனக்காக செய்ய வேண்டியவைகளெல்லாம்சிலுவையில் செய்து முடித்து, கடைசியாக முடிந்தது என்று சொல்லி, தலையை சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். அவர் பொல்லாத இந்த பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கும்படி, தேவனுடைய சித்தத்தின்படி, நம்முடைய பாவங்களுக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (கலாத்தியர் 1:4). அவர் தம்மைத் தாமே பலியிட்டதினாலே, ஒரே தரம் எல்லாவற்றையும் நமக்காக சிலுவையிலே செய்து முடித்தார் (எபிரெயர் 7:27)

இன்றைக்கு ஒரு வேளை உங்களுடைய அநேக காரியங்களுக்கு இன்னும் முடிவு வரவில்லையே என ஒரு முடிவை எதிர்பார்த்து நீங்கள் இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கலாம். ஆண்டவர் உங்களுக்காக எல்லாவற்றையும் சிலுவையில் சுமந்து முடித்துவிட்டார். அவர் நிச்சயம் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவை கொண்டுவருவார். கவலைப்படாதிருங்கள்!

ஆண்டவர் இந்த உலகத்திலிருந்த நாட்களில் எவைகளையெல்லாம் நமக்காக நிறைவேற்றி முடித்தார் என்பதைக் குறித்து தியானித்து, அந்த ஆசீர்வாதங்களை உங்கள்மேல் வைத்து, உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறேன்.

## 1) வாக்குத்ததங்களை நிறைவேற்றி முடித்த இயேசு:

**"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூக் 2:3).**

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது (2 கொரிந்தியர் 2:20) ஒருவேளை ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தாமதிக்கலாம். ஆனால் நிறைவேறுதலின் காலம் வரும்போது, ஆசீர்வாதத்தை நீங்கள் நிச்சயம் சுதந்தரித்துக்கொள்ளுவீர்கள். கவலைப்படாதிருங்கள்!

யோசேப்புக்கு 17 வயதில் ஆண்டவர் தரிசனம் கொடுத்தார். ஆனால் அந்த தரிசனம் நிறைவேற யோசேப்பு 13 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அவனுடைய தரிசனம் நிறைவேறும் காலம் வந்தபோது, ஆண்டவர் யோசேப்பை சிறையிலிருந்து விடுதலை செய்து, எகிப்து தேசம் முழுவதற்கும் அதிகாரியாய் மாற்றினார் (ஆதியாகமம் 41:41-43). அதுபோல ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த எல்லா வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றிக் கொடுப்பார். அல்லேலூயா.



**"எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார்" (யோவான் 19:28)**

ஆண்டவர் நமக்காக பாடுபட்டு, அடிக்கப்பட்டு சிலுவையில் தொங்கும்போது, அவர் வேத வாக்கியங்கள் யாவும் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார். உடனே ரோம போர் சேவகர்கள், கடற்காளானை, காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். அவர் காடியை வாங்கின பின்பு, எல்லாம் முடிந்தது என்று தம்முடைய ஜீவனை விட்டார் (யோவான் 19:28-30). ஆம், அவர் சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தி, ஒப்புக்கொடுத்ததினாலே. வேத வாக்கியங்கள் யாவும் நிறைவேறிற்று!



ஒரு முறை நாங்கள் ஈரோடு பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றபோது, ஒரு கணவனும், மனைவியும் என்னைப் பார்க்க வந்தார்கள். ஐயா நாங்கள் திருச்செங்கோட்டில் ஒரு பெரிய சூப்பர்மார்க்கெட் வைத்துள்ளோம். எங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு ஒரு குழந்தை பாக்கியம் மாத்திரம் இல்லை. எவ்வளவோ பணம் செலவு செய்துவிட்டோம். ஆண்டவர் எங்களுக்கு ஒரு குழந்தை பாக்கியம் தந்தால், எங்கள் வாழ்நாள் முழுவதும் அவருக்கு உண்மையாய் இருப்போம் என்றார்கள். அவர்களுக்காக ஜெபித்து, ஆண்டவரிடம் கேட்டபோது, அவர் சொன்னார், "ஈசாவின் அடி மரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு முளை எழும்பி, செழிக்கும்" என்றார் (ஏசாயா 11:1). ஆண்டவர் சொன்ன வாக்கை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களை ஜெபித்து அனுப்பிவிட்டேன்.

7 மாதங்கள் கழித்து, திடீரென்று அந்த மகள், அழுதுகொண்டு, என்னைப் மறுபடியும் பார்க்க வந்தாள். அவள் சொன்ன காரியம், ஐயா உங்கள் மூலமாக ஆண்டவர் தீர்க்கதரிசன வார்த்தையை கொடுத்தார்'. கண்டிப்பாக ஆண்டவர் சீக்கிரத்தில் நிறைவேற்றுவார் என்று நம்பிக்கையோடே இருந்தேன். இன்றைக்கு உங்கள் தீர்க்கதரிசனம் பொய்த்துவிட்டது. என் கணவர் என்னை விவாகரத்து செய்வேன் என்று பிடிவாதமாய் இருக்கிறார் என்றாள். உடனே நானும் ஆண்டவரிடம் அழுது ஜெபித்தேன். மறுபடியும் ஆண்டவர், "குறித்த காலத்திற்கென்று தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. தாமதித்தாலும் அது நிச்சயம் வரும். அது பொய் சொல்லாது' என்ற வாக்குத்தத்தத்தை கொடுத்தார். அந்த மங்கள வார்த்தையை கொடுத்து, ஜெபித்து, அனுப்பிவிட்டேன். 2 நாட்களுக்குள் அவள் என்னை மறுபடியும் தொலைபேசியில் அழைத்து, தேவனுக்கு ஸ்தோத்திரம்

என்றாள். என் கணவர் என் பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்டு, "இனிமேல் நான் உங்கள் மகளை கண்கலங்காமல் பார்த்துக்கொள்ளுவேன் என என்னை அழைத்துச் சென்று இப்போது என்னை நன்றாக வைத்துள்ளார்" என்றாள். அதைத் தொடர்ந்து ஆண்டவர் அவளுக்குக் கொடுத்த மங்கள வாக்கின்படியே அழகியதொரு ஆண் குழந்தையையும் கொடுத்தார்.

ஆம், ஆண்டவர் கொடுத்த வாக்கு, தரிசனம் நிறைவேறும் காலம் வரும் வரை, அதற்கு எதிர்மறையான காரியங்கள் நடப்பது போல் தான் இருக்கும். ஆனால், அது நிறைவேறும் காலம் வரும்போது, தானாக அற்புதங்கள் நடக்கும்! அல்லேலூயா.

## 2) குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றி முடித்த இயேசு:

**"இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்'' (யோவான் 19:25-27).**



சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து, கீழே பார்த்தபோது, சிலுவையின் அடிவாரத்தில், அவருடைய சொந்த தாயாகிய மரியாள், மரியாளுடைய சகோதரி கிலெயப்பா மரியாள், மூன்றாவது மகதலேனா மரியாள் ஆகியோர் நின்றார்கள். ஆண்டவர் மிகவும் நேசித்த சீடனாகிய யோவானும் நின்றான். தம்முடைய கடைசி நேரத்தில், தாயாரை பொறுப்பாக ஒப்படைக்க வேண்டுமென நினைத்து, தனது அன்பான சீடன் யோவானிடம் சேர்த்தார். தன் தாயாரைப் பார்த்து ஸ்திரீயே அதோ உன் மகன் என்றார். தன் சீடனைப் பார்த்து அதோ உன் தாய் என்றார் (யோவான் 19:26,27). ஆம், ஆண்டவருடைய பொறுப்பை பாருங்கள்.

இன்றைக்கும் உங்கள் குடும்பங்களில் உங்கள் கணவர் பொறுப்பற்று இருக்கலாம். உங்கள் பிள்ளைகள் கல்லூரியில் படிக்கும் நிலையில், கணவர் ஊதாரியாக சுற்றிக்கொண்டு இருக்கலாம். நீங்கள் இந்த மங்கள வார்த்தையை விசுவாசிக்கும்போது, இதுவரைக்கும் பொறுப்பு இல்லாமல் அலைந்த உங்கள் கணவரை ஆண்டவர் சந்திப்பார். இன்றைக்கு இரவு வீட்டிற்கு வரும்போது இதுவரை இல்லாதவிதத்தில் உங்கள் கணவரை மாற்றி, அவராகவே உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் தேவையான காரியங்களை தானாக செய்யும்படி மாற்றுவார். அல்லேலூயா!

எனக்கு மிகவும் தெரிந்த சகோதரர் மேத்யூ சேட்டா என்று ஒருவர் இருக்கிறார். அவருடைய நெருங்கின உறவினர் ஒருவரின் தாயார் மரணப் படுக்கையிலே இருந்தார்கள். மரணத்தின் கடைசி நிமிடத்தில் இருந்த அவர்களுக்கு, கேரள முறைப்படி, உறவினர்கள் இனிப்புத் தண்ணீர் ஊற்றிக்கொண்டே இருந்தார்கள். சகோதரர் மேத்யூ சொன்னார், அந்தத் தாயார் எத்தனை மணி நேரம் உயிரோடு இருப்பார்கள் என சொல்ல முடியாது. எப்படியாவது அவர்களுக்காக ஜெபியுங்கள் என என்னை, சென்னை அடையாரிலுள்ள கேன்சர் இன்ஸ்டியூட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு சென்று அந்தத் தாயாரைப் பார்த்தபோது, அவர்கள் உணர்வில்லாமல் படுத்துக் கிடந்தார்கள். எல்லாப் பேரப்பிள்ளைகளும் வந்து இனிப்பு நீரை ஊற்றிக்கொண்டே இருந்தார்கள்.

நான் உள்ளே போய் கண்களை மூடி ஜெபிக்க ஆரம்பித்தபோது, என்னுடைய கண்களுக்கு முன்பாக ஒரு தரிசனத்தைப் பார்த்தேன். 'நான் எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டேன். என் மகளுக்கு மட்டும் இன்னும் திருமணம் ஆகவில்லையே' என்ற அவர்களது கடைசி நிமிட ஆசையை ஆண்டவர் எனக்கு ஆவியிலே வெளிப்படுத்தினார். ஆண்டவரே, நீர் மரிக்கும்போது, உம்முடைய தாயாரை, பொறுப்பாக உம்முடைய சீடன் யோவானிடம் சேர்த்தீர். அதுபோல இவர்களும் தன்னுடைய பிள்ளையை ஓர் இடத்தில் சேர்க்கும் வரைக்கும் இவர்களுக்கு ஜீவனைக் கூட்டிக் கொடும்' என்று ஜெபித்தேன். நான் ஜெபித்த ஒரு மணி நேரத்திற்குள் உணர்வு இழந்த நிலையிலிருந்த அவர்கள் எழுந்து அமர்ந்தார்கள். ஆண்டவருடைய கிருபையினால் வருடங்கள் 7 உருண்டோடினாலும், கிருபையாக ஆண்டவர் அவர்களை உயிரோடே வைத்திருக்கிறார். அந்தத் தாயார் விரும்பியதுபோல அவர்கள் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தது மட்டுமல்ல, அவர்கள் மகளுக்குப் பிறந்த குழந்தையை இந்த தாயார் தான் வளர்த்து வருகிறார்கள். அல்லேலூயா.

## 3)உங்களுடைய துக்கங்களையெல்லாம் சுமந்து தீர்த்த இயேசு

**“மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்” (ஏசாயா 53:4).**



எல்லாம் முடிந்தது என்று சொன்ன ஆண்டவர், கடைசியாகச் சொல்லுகிறார் உங்கள் துக்கங்களையெல்லாம் நான் சுமந்துவிட்டேன். இனி நீங்கள் சுமக்க தேவையில்லை. பயங்கர மனவேதனையோடும், துக்கத்தோடும், அநேக கொடுமைகளை நீங்கள் அனுபவித்து, அநேக அழிவுகளை நீங்கள் சந்தித்து, இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கலாம். வேதம் சொல்லுகிறது:

**“இனிக் கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது; உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்... உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை; உன் சந்திரன் மறைவதுமில்லை; கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்” (ஏசாயா 60:18,20).**

இனி கொடுமை உன் குடும்பத்திலும், அழிவும், நாசமும் உன் எல்கையிலும் இருக்காது. இன்றைக்கு உன்னுடைய எல்லா அழிவிற்கும் ஆண்டவர் ஒரு முடிவை கொண்டு வருகிறார்.

சில வருடங்களுக்கு முன் நாங்கள் திருப்பூர் அருகிலுள்ள சேவூருக்கு ஊழியத்திற்காக சென்றிருந்தோம். அங்கே போதகர் சுரேஷ் என்பவர் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தார். இரயில் நிலையத்தில் என்னை வரவேற்க,ஒரு கணவனும், மனைவியும் வந்திருந்தார்கள். அவர்கள் சொன்ன காரியம், எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. என் கணவர் திருப்பூரில் ஒரு பெரிய பல் ஆஸ்பத்திரி வைத்துள்ளார். அவருடைய கண்களில் புரை மாதிரி வந்து, சென்னையில் பிரசித்தி பெற்ற டாக்டர் அறுவைசிகிச்சை செய்தபோது, அவருடைய 2 கண்களும் குருடாகிவிட்டது. யாராவது முன்னால் நின்றால் அவர்களுக்கு நிழல்தான் தெரியும். 3 முறை அறுவைசிகிச்சை செய்தும் தோல்வியடைந்த நிலையில், இனிமேல் கண்பார்வை கிடைக்காது என நினைத்து, தற்கொலைக்கு முயன்றார்.

ஒரு நாள் காலையில் என் கணவர் தொலைக்காட்சியில் நியூஸ் கேட்டுக்கொண்டே இருக்கும்போது, அதைத் தொடர்ந்து ஒளிபரப்பான ‘அன்பரின் சத்தம்’ என்ற உங்களுடைய தேவ செய்தியையும் கேட்டார். செய்தி வேளையில், ‘டாக்டர் அருண்பிரகாஷ், உங்கள் இரண்டு கண்களும் குருடான நிலையில், இரவெல்லாம் தற்கொலைக்கு முயற்சித்து, வேதனையின் உச்சக்கட்டத்தில் இருக்கின்றீர்கள். இயேசு இன்றைக்கு உங்கள் கண்களில் தெளிவான பார்வையை கொடுக்கிறார். நீங்கள் இப்பொழுது பச்சை கலர் லுங்கியும், சிகப்பு கலர் சட்டையும் அணிந்து, ஷோபாவில் உட்கார்ந்த நிலையில், டீ குடிக்கின்றீர்கள்’ என்ற அடையாளத்தோடு சொன்னார். ஜெப வேளையில், அவர் முழங்கால் படியிட்டு, என்னோடு இணைந்து ஜெபித்தார். அவருடைய கண்களில் கண்ணீர் தாரை தரையாய் ஊற்றிக்கொண்டே இருந்தது. தன் இரண்டு கைகளையும் வைத்து கண்களை துடைத்துவிட்டு, தன்னுடைய கண்களை மெதுவாக திறந்து பார்த்தார். பளிச்சென்று பார்வை வந்தது. அல்லேலூயா. நீங்கள் ஆண்டவரை நம்பும்போது, இதே அற்புதம் உங்களுக்கும் நடக்கும்.

**“‘மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்’ (கலாத்தியர் 3:13).**



என்ற வேத வசனத்தின்படி, ஆண்டவர் நமக்காக எல்லாவற்றையும் ஒரே தரம் சிலுவையில் செய்து முடித்தார். பிதாவே, என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தம் மாத்திரமே என்னுடைய வாழ்வில் நிறைவேறட்டும் என சிலுவையின் கடைசி பரியந்தம் அவர் தம்மை தாழ்த்தி, தேவ சித்தம் நிறைவேற தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்த இந்த தேவனை நாம் இறுகப் பற்றிக்கொள்வோம்! நம்முடைய வாழ்வில் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுவோம்! ஆமென்.

ஆண்டவர் தாமே உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள்

# வாழ்த்துக்கள்

**மார்ச் மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உங்கள் அனைவருக்கும்  தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை! தெரிவித்துக்கொள்கிறோம்!**

**'வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்' (ஏசாயா 45:4).**



# ஆறுதலைத் தேடி ஒரு நாள் உபவாச ஜெபம்!

## தென் சென்னையைக் குறித்த புதிய தரிசனம்!

(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், ஆசிரியர், மங்கள வார்த்தை)




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர – சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

இந்த மாதம் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனையைக் குறித்து உங்களுக்கு எழுதுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவருக்கு நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 103:1,2)

நான் ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே சகோதரருக்கு உதவியாக இருப்பதால், "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனை எப்படி ஆரம்பிக்கப்பட்டது? இதற்காக சகோதரர் அவர்கள் எடுத்த முயற்சிகள் என்ன?என்பதை நான் நன்கு அறிவேன். உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும் (யோபு 8:7) என்ற வேத வாக்குப்படி ஆண்டவர் "ஆறுதலைத் தேடி" சுகமளிக்கும் ஆராதனையின் மூலம் மகிமையான காரியங்களைச் செய்துவருகிறார்!

### தென் சென்னையைக் குறித்த தரிசனம்:

சென்னையில் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை ஜுலை 4, 2009-ல் சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் ஆரம்பித்தார். அதுபோலவே தென் சென்னை மக்களைக் குறித்த தாகம் சகோதரர் அவர்களுக்கு அதிகமாக இருந்தது. ஆகவே, சென்னை மக்களின் ஆசீர்வாதத்திற்காக,

ஆகவே, தென் சென்னை மக்களின் ஆசீர்வாதத்திற்காக, மாதந்தோறும் ஒரு சுகமளிக்கும் கூட்டத்தை எப்படியாகிலும் ஆரம்பிக்க வேண்டும் என்று மிகுந்த பாரத்தோடு நெடு நாட்களாக ஜெபித்துவந்தார்.

ஜெபத்தைக் கேட்கிற தேவன் (சங்கீதம் 65:2) சகோதரரின் ஜெபத்திற்குப் பதிலளித்தார். தென் சென்னையில் நடத்தும் கூட்டத்திற்கு "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனை என்று வைக்கும்படி சகோதரருக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினார். ஆண்டவருடைய வழிநடத்துதலின்படி, முதல் "ஆறுதலைத் தேடி ஒருநாள்" சுகமளிக்கும் கூட்டம் (மார்ச் 6,2016 அன்று சென்னை, OMR கொட்டிவாக்கத்தில் அமைந்துள்ள YMCA மைதானத்தில், சகோதரர் அவர்கள் நடத்தினார்கள். ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு, ஆரம்ப காலத்தில் சொற்ப மக்கள்" கலந்துகொண்டாலும், நாட்கள் செல்லச் செல்ல ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

### ஆறுதலைத் தேடி ஒரு நாள் சுகமளிக்கும் ஆராதனையில் அற்புதங்கள்:

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யுதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள" (அப்போஸ்தலர் 1:8)

என்ற வேத வசனத்தின்படி, சகோதரர் T. ஸ்டீபன் அவர்களை ஆண்டவர் தமது ஆவியினாலும், வரங்களினாலும் நிறைத்து "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுமகளிக்கும் கூட்டத்தில் வல்லமையாக எடுத்து பயன்படுத்தினார். இக்கூட்டத்தில் அற்புதங்கள் தானாக நடந்தது. பாவத்தின் வல்லமை செயலிழந்தது. தீராத நோய்கள் குணமானது. சாபத்தின் கட்டுகள் முறிக்கப்பட்டது. மந்திரம்,பில்லிசூனியம், செய்வினைக் கட்டுகள் தெறிப்பட்டன. பிரிந்த குடும்பங்கள் இணைக்கப்பட்டன. உடைந்த உள்ளங்கள் தேற்றப்பட்டன. ஆவியின் அபிஷேகம் அளவில்லாமல் ஊற்றப்பட்டது. இரட்சிக்கப்படாதவர்கள் மீது இரட்சிப்பின் வஸ்திரம் போர்த்தப்பட்டது. குழந்தை இல்லாத ஆயிரக்கணக்கான தம்பதியினர், குழந்தை பாக்கியம் பெற்று, மகிழ்ச்சியடைந்தனர். கிறிஸ்துவை அறியாத ஏராளமான ஜனங்கள் ஆண்டவருடைய அன்பை இக்கூட்டங்களில் ருசித்தனர். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், இக்கூட்டங்களில் ஆண்டவரிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுக்கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள், தங்களது சாட்சியை மேடையில் கண்ணீர்மல்க பகிர்ந்துகொள்ளும்போது, அதை கேட்கின்ற மக்கள் தானாக முன்வந்து ஆண்டவரை மகிமைப்படுத்துகிற காட்சி, கண்கொள்ளாது!

ஆறுதலைத் தேடி ஒரு நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு, அற்புத சுகம் பெற்ற ஒரு சாட்சியை நாம் வாசித்து, ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துவோம்!

## செயலிழந்த என் கணவரின் காலையும், கையையும் சுகப்படுத்தினார்!

என்னுடைய கணவர் இருதய வியாதியினால் பாதிக்கப்பட்டு, திடீரென ஒரு கையும், காலும் செயலிழந்த நிலையில் இருந்தார். அநேக மருத்துவர்களை அணுகி, லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து பார்த்தும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. எல்லா சோதனைகளையும் எடுத்து, அறுவை சிகிச்சை செய்தால்தான் உங்கள் கணவருக்கு சரியாகும் என மருத்துவர் சொல்லிவிட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையில், சென்னையிலுள்ள எங்கள் அக்கா மகள் சொன்னாள், "சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் கூட்டத்திற்கு சித்தப்பாவை வாருங்கள், ஒரு மாதம் கூட்டத்திற்கு வந்தவர்கள், அடுத்த மாதம் சரியாகிவிடுகிறது என சாட்சி சொல்லுகிறார்கள்" என்றாள்."ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைக்கு என் கணவரை கைத்தாங்கலாகத்தான் நான் அழைத்து வந்தேன். கூட்டத்தின் முடிவில், சகோதரரிடம் ஜெபித்தபோது , மரணக் கட்டுகள் உங்கள் கணவரின் கழுத்தை சுற்றியிருக்கிறது, உங்கள் கணவருக்கு ஆண்டவர் புது இருதயத்தைக் கொடுத்து, இப்பொழுதே சுகத்தைத் தருகிறார்" என்று மங்கள வார்த்தை சொன்னார். சகோதரரின் மங்கள வாக்கின்படியே, என் கணவருக்கு ஆண்டவர் பூரண சுகம் கொடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரை எப்பொழுதும் என் கணவர் சுறுசுறுப்பாக இருக்கிறார். பூரண சுகம் கொடுத்த தேவனுக்கே மகிமை! அல்லேலூயா.



வசந்தா, பொள்ளாச்சி

## தனி ஜெபம்:

கூட்டம் முடிந்த பின்னர், சகோதரர் அவர்கள் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" உபவாசக் கூடுகைக்கு வந்துள்ள அனைத்து மக்களையும் நேரயடியாக பார்த்து, தனிப்பட்ட முறையில் அவர்களது ஜெப விண்ணப்பங்களை கேட்டறிந்து, அவர்கள் தலையின்மேல் தன் கையை வைத்து, ஆண்டவர் கொடுக்கும் மங்கள வார்த்தைகளை கூறி, அவர்களை ஆசீர்வதித்து அனுப்புவார். தனி ஜெபம், சில வேளைகளில் நள்ளிரவை கடந்து, அதிகாலை 2:00 மணி வரை சென்றிருக்கிறது.

## நன்றி செலுத்துகிறோம்:

"ஆறுதலைத் தேடி ஒருநாள்" சுகமளிக்கும் கூட்டம் தென் சென்னையில் நடைபெற, சகோ. வேதராஜ், சகோ. டேவிட் சாமுவேல், சகோ. ரூசோ, சகோ. பால்சன் அவர்களோடு. உங்களில் அநேகர் இந்த கனமான ஊழியத்தில் தன்னார்வ தொண்டு ஊழியர்களாக இணைந்து ஊழியம் செய்து வருகின்றீர்கள். இந்த விசேஷித்த நன்நாளில், நாங்கள் உங்கள் யாவருக்கும் தனிப்பட்டமுறையில் நன்றிசொல்வதோடு, இக்கூட்டங்கள் மூலம் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை. ஆண்டவர் தாமே கீழ்க்கண்ட வேத வசனத்தின்படி. உங்கள் கணக்கில் எழுதுவாராக.

"உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்" (பிலிப்பியர்4:17)

ஒவ்வொரு நாளும் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும், நீங்கள் கையிட்டுச் செய்கிற ஒவ்வொரு காரியங்களையும் ஆசீர்வதிக்குமாறும் நாங்கள் தேவனின் அன்பு ஊழிய குடும்பமாக இணைந்து ஜெபிக்கிறோம். நமது அருமை ஆண்டவர் அப்படியே உங்களை ஆசீர்வதித்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவாராக! (எபிரெயர்6:10, உபாகமம் 1:11)

கோரோனா தாக்கத்தினால் தடைபட்ட இக்கூட்டம் மறுபடியும் புது உத்வேகத்தோடு நடக்க ஆண்டவர் வழிவாசல்களை திறந்து கொடுக்குமாறு தொடர்ந்து கருத்தாய் ஜெபியுங்கள். உங்கள் ஜெபமே எங்கள் பெலன்.

ஆண்டவர் தாமே உங்களை அளவில்லாமல்

பெண்கள் பகுதி:

# கிறிஸ்து ஏன் காயப்பட்டார்?





(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன்)
தேவனின் அன்பு ஊழியங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர-சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் யாவரையும் இந்த மார்ச் மாதத்தில் பத்திரிகை வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மாதம் வரையிலும் தேவன் நம்மை கண்மணிபோல் பாதுகாத்தார் என்பதை நினைத்து அவருக்கு நன்றிசெலுத்துவோம் (சங்கீதம் 9:1,2). நாம் நலமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் கஷ்டங்களையும்,பாடுகளையும் சகித்தார். ஒரு அருமையான வேத வசனம் இப்படிச் சொல்லுகிறது:

**"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).**

இயேசுவின் பாடுகள், தியாகம் நமக்கு எத்தனையோ ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது. அவருடைய தியாகம் ஒரு நாளும் வீணாய் போனதில்லை. ஏன் அவருக்கு இந்தப் பாடுகள், காயங்கள் என்பதைக் குறித்து நாம் தியானிப்போமா!

## 1) நம்முடைய மீறுதல்களுக்காக:

**"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்: நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).**

'நம்முடைய' என்ற வார்த்தை, 'நல்லோர்', 'தீயோர்' எல்லோரையும் குறிக்கிறது. 'மீறுதல்' என்றால் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் நடப்பது. அது நமக்கு பாவத்தைக் கொண்டுவரும். பாவத்தின் தண்டனை என்ன? பாவத்தின் தண்டனை/சம்பளம் மரணம். ஒரு பாவிக்கு இன்னொரு பாவி பரிகாரம் செய்ய முடியாது. ஒரு குருடனுக்கு இன்னொரு குருடன் வழிகாட்ட முடியாது. நாம் பாவம் செய்யும்போது தேவனோடு உள்ள ஐக்கியத்தை இழந்துபோகிறோம். பிரச்சனைகளில் மாட்டிக்கொள்கிறோம். ஆனால் ஆண்டவர் என்ன சொல்லுகிறார்? நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் நாமோ ஒவ்வொரு நாளும் தீயகாரியங்களை செய்து அவரை காயப்படுத்திக் கொண்டிருக்கிறோம். பாவிகளாகிய நம்மை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு இந்த உலகில் வந்தார் (தீமோ 1:15). அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7). எனவே பரிசுத்தமாய் வாழ பழகிக்கொள்ளுங்கள்.

## 2) நம்முடைய நோய்களுக்காக:

**"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 8:17).**

வியாதி மிகவும் கொடிதான ஒன்று. குடும்பத்தில் ஒருவர் வியாதிப்பட்டாலும் முழு குடும்பமும் வேதனை அடைகிறோம். உங்களுக்குச் சுகமும், ஆரோக்கியமும் தருவது, நீங்கள் செய்த தர்மமோ அல்லது ஊழியக்காரர்களின் ஜெபங்களோ அல்ல. சிலுவையில் தொங்கும் இயேசுவின் தழும்புகள். நீங்கள் விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பீர்கள் (யோவான் 11:40). அவருடைய செட்டைகளின் மறைவில் ஆரோக்கியம் தங்கியிருக்கும். எனவே நீங்கள் சுமக்க வேண்டிய அவசியமில்லை. பெலவீனம் வரும்போது பயந்துபோய் மருத்துவரை நாடுகிறோமே ஒழிய பரம வைத்தியரைத் தேடுவதில்லை. ஆம், விசுவாசத்தோடு ஆண்டவரை தேடுங்கள். சுகம் பெறுவீர்கள்.

## 3) நம்முடைய சாபங்களுக்காக:

**"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலாத்தியர் 3:13).**

நம்முடைய சாபங்களை நீக்கி, ஆசீர்வாதங்களைக் கொண்டுவர அவர் காயங்களை ஏற்றுக்கொண்டார் சாபம் என்பது நம்முடைய வாழ்க்கையை சிதைக்கக் கூடிய ஒரு தீய வல்லமை. கண்ணினால் சாபத்தை பார்க்க முடியாமல் இருந்தாலும் அது குடும்பங்களை தாக்கி சீரழிக்கும்போது எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்ந்து கொள்கிறோம். தேவனிடத்திலிருந்து வருகிற சாபங்களும் உண்டு. மந்திரவாதிகள் ஏவல் நிமித்தம் வருகிற சாபங்களும் உண்டு. மனிதர்கள் மூலமாக வருகிற சாபங்களும் உண்டு. ஊழியக்காரர்கள் மூலம் வருகிற சாபங்களும் உண்டு. முற்பிதாக்களின் அக்கிரமங்கள் நிமித்தம் தலைமுறை தலைமுறையாக வருகிற சாபங்களும் உண்டு. இயேசு இரண்டு விதங்களில் இந்த சாபங்களை முறித்து, விடுதலை உண்டாக்கினார்.

➔ **முதலாவதாக,** சாபமான முள்முடியை தலையிலே ஏற்றுக்கொண்டார். 'முள்' என்பது சாபத்தின் சின்னம்.

➔ **இரண்டாவதாக,** சாபமான மரத்தில் தொங்கி, சாபத்தை முறித்தார்.

மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று நியாயப்பிரமாணம் சொல்லுகிறது. (கலாத்தியர் 3:13). "உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்புகூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்" (உபாகமம் 23:5). இனி ஒரு சாபமுமிராது (வெளிப்படுத்தல் 22:3). அல்லேலூயா.

## 4) நம்முடைய அவிசுவாசத்திற்காக:

**"பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" (யோவான் 20:27)**

அவிசுவாசம் என்றால் என்ன? தேவனை நம்ப மறுப்பது. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே நடந்தபோது அவரை நம்பவில்லை. சிறு காரியத்திற்கும் முறுமுறுத்தார்கள். அவர் செய்த நன்மைகளை மறந்துபோனார்கள். 3-ஆண்டு காலம் அவரோடிருந்த தோமா அவரை விசுவாசிக்கவில்லை. நாம் அவரை நம்ப மறுக்கும்போது அவர் உள்ளம் காயப்படுகிறது. அவரை மறுதலிக்கும்போது மீண்டும், மீண்டும் அவரை சிலுவையில் அறைகிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். உங்களுடைய அவிசுவாசத்தினால் அவரை காயப்படுத்தாதிருங்கள். மனிதர்களை நம்புகிறதைப் பார்க்கிலும் ஆண்டவரை நம்புங்கள். ஆம், ஆண்டவரே உம்மை விசுவாசிக்கிறேன் என்று சொல்லுங்கள். உங்களுடைய விசுவாசத்தைக் கண்டு, அவர் உங்களுக்கு இரங்கி அற்புதம் செய்வார்.

எனவே இந்த லெந்து நாட்களிலே உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். கறி, மீன் சாப்பிடாமல், பூ வைக்காமல் இருப்பதல்ல பரிசுத்தம். வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுங்கள். நம் தேவன் நிச்சயம் உங்களைக் குறித்து சந்தோஷப்படுவார். முயற்சி செய்வோமா! நாம் ஜெபிப்போம்!

## ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்காகவும் நான் ஊக்கமாய் ஜெபிக்கிறேன். ஆண்டவரே இவர்களை உம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி, சுத்திகரியும். அவர்களுடைய மீறுதல்களை, அக்கிரமங்களை மன்னியும். இவர்களுக்காக நீர் சிலுவையில் உமது இரத்தத்தை சிந்தினபடியால், எல்லா சாபங்களும் இவர்களுக்கு ஆசீர்வாதமாய் மாறுவதாக, அவர்கள் உம்மை விசுவாசித்து, அற்புதங்களை, அதிசயங்களை தங்கள் வாழ்வில் பெற்றுக்கொள்ள அருள் செய்யும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

# வேத வினா போட்டி–9

**விதிமுறைகள்**

1.சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும், அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில், பரிசளிக்கப்படும்.

2.விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.

3.விடைகள் ஒவ்வொருமாதமும் 20–ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேரவேண்டும்

குலுக்கல் முறையில் பிப்ரவரி மாதம் பரிசை வென்றவர்கள்

1] Sis. லெனிட்டா முடிச்சூர், சென்னை

2] Sis. பூரணா செல்வன், திருநெல்வேலி

## பிப்ரவரி மாத விடைகள்

1) பண்படுத்தவும்,காக்கவும் (ஆதியாகமம் 2:15)
2) மனுஷனை உண்டாக்கினதற்காக (ஆதியாகமம் 6:6)
3) யாக்கோபு (ஆதியாகமம் 32:25)
4) யோசேப்பு (ஆதியாகமம் 37:19)
5) யூதா (ஆதியாகமம் 49:9)
6) லோத்து (ஆதியாகமம் 13:12)
7) ஆபிரகாம், இஸ்மவேல் (ஆதியாகமம் 17:26)
8) 400 (ஆதியாகமம் 23:16)
9) கிலேயாத் மலை (ஆதியாகமம் 31:23)
10) ஏசா (ஆதியாகமம் 27:38)

## மார்ச் மாத கேள்விகள்

1) எபிரேய மருத்துவச்சிகளின் பெயர் என்ன?
2) மோசே என்பதன் அர்த்தம் என்ன?
3) தேவ பர்வதம் எது?
4) மீதியான் தேசத்து ஆசாரியன் யார்?
5) மீதியான் தேசத்து ஆசாரியனுக்கு எத்தனை குமாரத்திகள்?
6) நதியில் ஸ்நானம்பண்ண வந்தவள் யார்?
7) திக்குவாய், மந்தநாவு உள்ளவன் யார்?
8) யாக்கோபின் கர்ப்ப பிறப்புகள் எத்தனைபேர்?
9) எகிப்து தேசத்தை மூடிய வாதை எது?
10) கல்மழை இல்லாதிருந்த நாடு எது?

### அனுப்பவேண்டிய முகவரி:


Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்.14 ராமலிங்க நகர், OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை 600041
PHONE:+ 91 4424547999
+ 91 99419 50999
Email:
publications@godsloveministries.co.in
Website www.godsloveministries.co.in

சாட்சி பகுதி:

# ஆண்டவரின் அற்புதங்கள்!

சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, “தேவனின் அன்பு ஊழியத்தை ஸ்தாபித்து” உலகெலங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் “அன்பரின் பாதத்தில் ஒரு நாள்” உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் “ஆறுதலைத் தேடி ஒரு நாள்” சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது; அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது; ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை, ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:

## விரும்பிக் கேட்டதை அருளினார்:



**Sis.செல்லபாய்,**
**மடிப்பாக்கம், சென்னை**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திராம்! சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் ஊழியத்தின் மூலம் நான் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளேன். ஒரு முறை சகோதரர் அவர்கள் கொடுத்த தேவ செய்தியை யுடியுப்பில் பார்த்தேன். அவர்கள் ஆபகூக் 2:3 – ன்படி, “குறித்தகாலத்துக்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும். நீ எதைக் விரும்பிக் கேட்கிறாயோ அது உனக்குக் கிடைக்கும்” என மங்கள வார்த்தை கூறினார்கள். நானும் ஆண்டரிடம் நீண்ட நாட்களாக என் மகனுக்கு ஒரு ஆண் குழந்தை வேண்டும் என ஜெபத்தில் கேட்டுக்கொண்டே இருந்தேன். இந்த நேரத்தில் சகோதரர் யூடியூப் மூலம் சொன்ன மங்கள வார்த்தைகள் எனக்குத்தான் என்று விசுவாசித்தேன். ஜெப வேளையில், நானும் சகோதரர் ஸ்டீபன் அவர்களோடு இணைந்து ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் அற்புதம் செய்தார். நான் ஜெபத்திலே கேட்டபடியே, என் மகனுக்கு அழகியதொரு ஆண் குழந்தையை ஆண்டவர் 13.09.2020 அன்று கொடுத்தார். ஆண்டவர் செய்த இந்த அற்புதத்திற்காக அவருக்கு கோடி நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக!

## இழந்த வேலையை பதவி உயர்வோடு திரும்ப கொடுத்தார்!



**Sis.தேவி**
**சென்னை**

கடந்த சில மாதங்களாக என்னுடைய வேலையில் ஏராளமான பிரச்சனைகள் இருந்தது. என்னை வேலையை விட்டு நிறுத்திவிடுவார்களோ என்ற பயத்தில், அழுதுகொண்டே நான் “அன்பரின் பாதத்தில் ஒரு நாள்” உபவாசக் கூடுகையில் கலந்துகொண்டேன், தனி ஜெபத்தில் சகோதரரிடம் ஜெபித்தபோது, நீ இதிலும் பெரிய காரியங்களை காண்பாய். இந்த மாதத்தின் வாக்குத்தத்தத்தின்படி, நீ அவரை அஸ்திபாரமாக பிடித்துள்ளபடியால், நீ ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை. ஆண்டவரில் உறுதியாய் இரு மகளே என்று மங்கள வார்த்தை சொன்னார். சகோதரர் சொன்ன அந்த வார்த்தைகளை அப்படியே நான் விசுவாசித்தேன். என்ன ஆச்சரியம்! சகோதரரிடம் ஜெபித்துச் சென்ற ஒரு சில நாட்களுக்குள், ஆண்டவர் எனக்கு அற்புதம் செய்தார். என்னுடைய வேலை ஸ்தலத்தில் HR துறையிலிருந்து அழைத்து, யார் தேவையில்லாதவற்றையெல்லாம் கேட்டார்களோ, அவர்களே என்னை வைஸ் பிரசிடென்ட் (Vice President) ஆக்கி, பதவி உயர்வு கடிதத்தை கொடுத்தார்கள். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

## யூட்ரஸ் கட்டி கரைந்து, வெளியே வந்தது!



Sis.பிரியா,
அண்ணா நகர், சென்னை

கடந்த சில மாதங்களாக நான் வயிற்று வலியினால் மிகவும் வேதனையோடு இருந்தேன். எப்படியாகிலும் எனக்கு சுகம் கிடைக்கும் என்ற வாஞ்சையோடு "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாச கூடுகையில் கலந்துகொண்டேன். சகோதரர் அவர்களிடம் தனியாக ஜெபித்தபோது, உன்னுடைய யூட்ரசில் கட்டி இருப்பதினால். உன்னுடைய குடல் எல்லாம் புண்ணாக இருக்கிறது. ஆனாலும் நீ பயப்படாதே. நீ வீட்டிற்குச் செல்லும்போது ஒரு அற்புதத்தைக் காண்பாய், என்று சொன்னார். என்ன ஆச்சரியம்! சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, ஆண்டவர் எனக்கு அற்புதம் செய்தார். என்னுடைய யூரின் வழியாக, யூட்ரஸ் கட்டி கரைந்து வெளியே வருவதை நான் பார்த்தேன். அந்த கட்டி உடைந்து வெளியே வந்தபோது எந்தவிதமான வேதனையோ, கஷ்டமோ இல்லை. ஐந்து வருட வயிற்று வலியிலிருந்து ஆண்டவர் பரிபூரண சுகம் தந்தார். ஜெபித்த சகோதரருக்கும், அற்புதம் செய்த ஆண்டவருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

## ஸ்பான்சர் மூலம் என் மகனை வெளிநாட்டில் படிக்க வைத்தார்!



Bro.சுவாமிதாஸ்,
பாண்டிச்சேரி.

"அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகைக்கு நாங்கள் குடும்பமாக தவறாமல் வந்துகொண்டிருக்கிறோம். என்னுடைய மகன் 12-வது வகுப்பு தேர்ச்சிபெற்று, சென்னையில் ஐ.எல்.சி. தேர்வை முடித்தான். தனி ஜெபத்தில் சகோதரரிடம். "என் மகன் வெளிநாடு சென்று படிக்க விருப்பமாக இருக்கிறான்" என்று தெரிவித்தேன். சகோதரர் அவர்கள் தீர்க்கதரிசனமாக. "உன் பிள்ளைக்கு ஸ்பான்சர் கிடைத்து, அவன் வெளிநாட்டில் தன் உயர் படிப்பை தொடருவான்" என்று மங்கள வார்த்தை சொன்னார். நான் தொடர்ந்து என் மகன் வெளிநாடு சென்று படிப்பதற்கான காரியங்களை செய்து வந்தேன். சகோதரரிடம் ஜெபித்துச் சென்ற ஒரு சில வாரங்களுக்குள், அவர்களது மங்கள வாக்கின்படியே என் மகன் வெளிநாடு சென்று ஸ்பான்சரில் படிக்க ஆர்டர் வந்தது. இப்பொழுது என் மகன் வெளிநாட்டு யூனிவர்சிட்டியில் படித்துக்கொண்டிருக்கிறான். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, அற்புதம் செய்த ஆண்டவருக்கும், ஜெபித்த சகோதரருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக! அல்லேலூயா.

## பரிமளத் தைலத்தின் மூலம் அற்புதம் செய்தார்!



Sis.சோனியா,
எண்ணூர், சென்னை

சில மாதங்களாக எனக்கு வயிற்று வலி இருந்துகொண்டே இருந்தது. மருத்துவமனைக்குச் சென்றதும், என்னை பரிசோதனை செய்தபோது, எனக்கு இடது வயிற்றுப் பகுதியில் அப்பெண்டிஸ் (Appendix) இருக்கிறது என மருத்துவர் சொன்னார். எனது தோழி ஒருவர் சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் குழுவில் இணைந்து, இஸ்ரேல் புனிதப் பயணம் சென்று திரும்பியிருந்தாள். அவர்கள் என்னிடம் ஒரு பரிமள தைலத்தைக் கொடுத்து, இது சகோதரர் அவர்களால் ஜெபித்துக்கொடுக்கப்பட்ட பரிமளத் தைலம். இதை நீங்கள் அந்த இடத்தில் தேயுங்கள். உங்களுக்குச் சரியாகிவிடும் என்று சொன்னார்கள். நான் ஜெபத்துடன், எனக்கு அப்பெண்டிஸ் வியாதியே வரக்கூடாது என விசுவாசித்து பரிமள தைலத்தை தேய்த்தேன். என்ன ஆச்சரியம்! ஒரு வாரம் கழிந்த பின்னர், நான் பரிசோதனை செய்தபோது, எனக்கு அப்பெண்டிஸ் இல்லை என்று ரிப்போர்ட் வந்தது. சகோதரர் ஜெபித்துக்கொடுத்த பரிமளத் தைலத்தின் மூலம் அற்புதம் செய்த ஆண்டவருக்கே என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக! அல்லேலூயா.

## சூப்பர் மார்க்கெட் கடையை வாங்க கிருபை செய்தார்!



Bro.ராமு,
மாதவரம், சென்னை

நான் அநேக வியாபாரங்களை (Business) செய்து வந்தேன். வியாபரங்களில் நஷ்டமடைந்து. மிகுந்த கடன் பிரச்சனையில் அவதிப்பட்டேன். என்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவரின் சூப்பர் மார்க்கெட் கடையில் வேலை செய்து வந்தேன். இந்த நேரத்தில் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகைக்கு வந்து, சகோதரர் T. ஸ்டீபன் அவர்களிடம் ஜெபித்தபோது, "சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய், ஆண்டவர் உங்களை மகிழ்ச்சியாக்குவார்" என்று மங்கள வார்த்தை சொன்னார். சகோதரர் அவர்களின் வாக்குப்படியே, நான் வேலை செய்த அதே சூப்பர் மார்க்கட் கடையை எங்கள் உறவினர்களிடமிருந்து சொந்தமாக வாங்கும்படி ஆண்டவர் கிருபை செய்தார். தற்போது ஆண்டவர் என்னுடைய கடை வியாபாரத்தை அற்புதமாய் ஆசீர்வதித்து வருகிறார். அற்புதம் செய்த ஆண்டவருக்கும், ஜெபித்த சகோதரருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

# மார்வெல் திருமண தகவல் மையம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

திருமணம் என்பது பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்டது. ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட ஆண்டவர், அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:18,21,22). இன்றைக்கும் மணமகனுக்கு ஏற்ற மணவாட்டியை தெரிந்தெடுப்பது ஆண்டவருக்கு முன்பாகவும், அவரது வசனத்திற்கு முன்பாகவும் நேர்த்தியானதாக, அருமையானதாக இருக்கும்!

உங்கள் வசதிக்காக, நாங்கள் மிகுந்த ஜெபத்துடன் மார்வெல் திருமண தகவல் மையத்தை ஆரம்பித்து, பல வருடங்களாக நடத்தி வருகிறோம். எனவே, இத்திருமண மையத்தில் உங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடைய பெயர்களை பதிவுசெய்து, அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை தெரிந்தெடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கரத்தினாலே உங்களுக்கு வாய்க்கும் (ஏசாயா 53:10). மகிமையான நல்விசேஷங்கள் உங்கள் குடும்பத்திலே வசனிக்கப்படும் / பேசப்படும் (சங்கீதம் 87:3).

மேலும் விபரங்களுக்கு 7824855999 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை நகரத்திலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்றும் பதிவுசெய்துகொள்ளலாம். முகவரிகளை கீழே தந்துள்ளோம்:

## சென்னை

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை – 600 041. மின்னஞ்சல்: info@marvelmatrimony.com அலைபேசி: 78248 55999

## மும்பை

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** மும்பை ஜெப கோபுரம், எண்.L-411, ட்ரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விஹார் அருகில், பாண்டுப் மேற்கு, மும்பை – 400 078. அலைபேசி: 9930737999

## நாகர்கோவில்

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** நாகர்கோவில் ஜெப கோபுரம், பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண். 177, WCC ரோடு, YMCA எதிர்புறம், நாகர்கோவில் – 629 001 கன்னியாகுமரி மாவட்டம். அலைபேசி: 9884480999

அதுமட்டுமல்ல திருமணம், வரவேற்பு போன்ற சுபநிகழ்வுகளில் புகைப்படம் எடுத்தல் (Wedding and Reception photography), வீடியோ எடுத்தல் (Video Coverage) போன்ற பிற சேவைகளையும் நாங்கள் வழங்குகிறோம். விபரங்களுக்கு, www.marvelmatrimony.com என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 78248 55999 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

சிறுவர்கள் பகுதி
(குட்டீஸ் ஸ்பெஷல்):



# ஏமாற்றி வாழாதே!



(சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன்)
தேவனின் அன்பு ஊழியங்கள்

## ஹலோ பிரண்ட்ஸ்,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே தம்பி, தங்கைகளாகிய உங்கள் யாவரையும் நான் அன்போடு வாழ்த்துகிறேன்!

கடந்த மாதம் முழுவதும் தேவன் நம்மை கண்மணி போல பாதுகாத்தார் அல்லவா, அதை நினைத்து அவருக்கு நாம் நன்றிசெலுத்துவோம் (சங்கீதம் 103:1,2). இந்த மாதமும் ஒரு குட்டிக் கதையோடு உங்களை நான் சந்திக்க வந்திருக்கிறேன். ஏமாற்றம் நிறைந்த உலகத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஏமாறுகிற மனிதர்கள் இருக்கும் வரை, ஏமாற்றுகிறவர்கள் இருந்துகொண்டு தான் இருப்பார்கள்.

ஒரு ஊரில் ஒரு உப்பு வியாபாரி இருந்தார். தினந்தோறும் அவர் தன்னிடமுள்ள குதிரையின்மேல் உப்பு மூட்டையை ஏற்றியனுப்பி, விற்பனை செய்வது வழக்கம். ஒரு நாள் இப்படி குதிரை உப்பு மூட்டையை சுமந்து செல்லும்போது, வழியிலுள்ள ஒரு குளத்தில் தவறி விழுந்துவிட்டது. தண்ணீரில் உப்பு மூட்டை நனைந்து, எல்லாம் கரைந்துவிட்டது. சிறிது நேரம் கழித்து குளத்தைவிட்டு வெளியே வரும்போது, குதிரை மிகவும் இலகுவாக உணர்ந்தது.

உடனே குதிரை ஒரு திட்டம் போட்டது. தினமும் இப்படியே தண்ணீரில் இறங்கி உப்பை கரைத்துவிட்டுச் சென்றது. முதலாளிக்கு ஒரே சந்தேகம். எப்படி நாம் குதிரையின் மேல் ஏற்றி அனுப்புகிற உப்பு, போய் சேரவேண்டிய இடத்திற்குச் சென்றடையாமல், பாதியிலே காலியாகிவிடுகிறது?ஆகவே, ஒரு நாள் குதிரையோடு கூட, பின்னாடிச் சென்று, மறைந்திருந்து, பார்த்தார். குதிரையோ தான் சுமந்துவந்த உப்பு மூட்டையை குளத்தில் விழும்படிச் செய்தது. அப்போதுதான் முதலாளிக்கு உண்மை புரிந்தது. முதலாளிக்கு ஒரு எண்ணம் தோன்றியது. மறுநாள் குதிரை மேல் இரண்டு பஞ்சு மூட்டையை ஏற்றி அனுப்பினார். இப்பொழுதும் குதிரை அப்படியே செய்தது. ஆனால் பஞ்சு தண்ணீரில் கரையாமல், இன்னும் அதிக சுமையானது. ஆகவே, குதிரையால் தண்ணீரை விட்டு வெளியே வர முடியவில்லை, இப்பொழுது குதிரை ஐயோ, நாம் மாட்டிக்கொண்டோமோ என நினைத்து, முதலளியின் அருகில் வந்தது. “நீ இத்தனை நாட்களும் என்னை ஏமாற்றி, என் வருமானத்தையெல்லாம் வீணாகக் கரைத்திருக்கிறாய். உனக்கு பாடம் புகட்டவே பஞ்சு மூட்டையை உன்மேலே வைத்தேன். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதை உணர்ந்துகொள். ஒரு நாளும் உனக்கு உதவி செய்யும் முதலாளியை ஏமாற்ற வேண்டும் என்று நினைக்கக் கூடாது. அது உனக்கு ஒரு நாள் ஆபத்தாய் முடியும் என்பதை உணர்ந்து கொள்” என்று குதிரையிடம் முதலாளி கூறினாராம்.

ஆம் எனக்கு அன்பான தம்பி, தங்கைகளே, இந்த உலகில் வாழுகிற நாட்களிலே யாரையும் நாம் ஏமாற்றக் கூடாது.

- **முதலாவது, உன்னைப் படைத்த கடவுளிடம் உண்மையாய் இரு. அவரைத் தேடு.**
- **இரண்டாவது, உன் பெற்றோருக்கு உண்மையாய் இரு.**

**மூன்றாவது, உன்னைச் சுற்றி இருப்பவர்களிடத்தில் உண்மையாய் இரு. அது உன்னை உயர்ந்த அடைக்கலத்தில் கொண்டு சேர்க்கும். இல்லையென்றால், நீ துன்பங்களை சுமக்க நேரிடும்!**

உன்னுடைய வாழ் நாள் முழுவதும், ஆண்டவருக்குப் பயந்து, பிறறை ஏமாற்றாமல் உண்மையாக வாழ முயற்சி செய்வாயா? முயன்று பார்! உன்னுடைய முயற்சி உன்னை ஆசீர்வாதத்திற்குள் கொண்டு செல்லும்!

**"பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்" (நீதிமொழிகள் 12:22)**

என்ற வேத வசனத்தை உன்னுடைய வாழ்வில் அணிந்துகொள். ஆண்டவர் தாமே உன்னை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## ஜெபம்:

அன்புள்ள பரலோக பிதாவே, இதை வாசிக்கின்ற சிறு பிள்ளைகள் ஒவ்வொருவரையும் நீர் ஆசீர்வதியும். அவர்கள் ஒவ்வொருவரும் பிறறை ஏமாற்றாமல், உண்மையாய் வாழ கிருபை செய்யும்! சிறு பிள்ளைகளை அணைத்து நீர் முத்தமிடும். அவர்களது படிப்பு, எதிர்காலங்களை நீர் பொறுப்பெடுத்துக்கொள்ளும்! தங்கள் பெற்றோருக்கும், பெரியோர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்க கிருபை செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.





## வாலிபர் பகுதி:

# ஜெபத்தின் முக்கியத்துவம்!


(சகோதரி பவ்யா டெரில்)
தேவனின் அன்பு ஊழியங்கள்


*அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்களை மீண்டும் இந்த மாத இதழ் மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய கால கட்டத்தில், பொல்லாத இந்த உலகத்திற்கு ஜெபம் மிகவும் இன்றியமையாதது. குடும்பங்களில், தேசங்களில் எழுப்புதலை உருவாக்கிக் கொடுப்பது ஜெபம் தான். நீங்கள் ஜெபிக்க முடியாதபடிக்கு சாத்தான் அநேக தடைகளை கொண்டு வருவான், அவன் ஜெபத்தைத் தடுப்பான். ஆனால் ஜெபமோ சாத்தானை தடுக்கும்.

இந்த லெந்து நாட்களில் அநேக காரியங்களை விட்டுவிட்டால் தேவன் என்னை ஆசீர்வதிப்பார் என்று அநேகர் நினைக்கின்றீர்கள். அப்படியல்ல, எப்பொழுதும் நாம் ஆண்டவருக்குப் பயந்து வாழ பழகிக் கொள்ளவேண்டும். ஒரு பெரிய ஜெப வீரனாக, வீராங்கனையாக விளங்க வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவர் உங்களிலே பிரியப்படுவார். ஒரு நாளைக்கு 24 மணி நேரங்கள் உண்டு. அந்த நேரங்களை நாம் எப்படி செலவிடுகிறோம்? உண்ணவும், உறங்கவும், வேலை செய்யவும்! ஆனால் உங்களுக்காக ஜெபிப்பதற்கு நீங்கள் செலவிட விரும்பும் நேரம் எது? என்று கேட்டால், உங்களில் அநேகர் அப்படி ஒன்றும் இல்லை என்றுதான் பதில் சொல்லுவீர்கள். ஆண்டவர் நம்மைப் பார்த்து, "ஒரு மணி நேரமாவது விழித்திருந்து ஜெபிக்கக் கூடாதா? (மத்தேயு 26:40) என்று கேட்கிறார். அவர் நமக்காக எவ்வளவாய் பாரப்பட்டு ஜெபித்திருக்கிறார். நாம் ஏன் அதை மறந்துபோய்விடுகிறோம். கஷ்டம் வரும்போது மாத்திரம் நாம் ஆண்டவரை தேடுகிறோம், ஜெபிக்கிறோம். பாவ உலகிலே வாழ்ந்து, சமாதானத்தை இழந்தவர்களாய் யார் எனக்கு உதவி செய்வார்கள் என்று புலம்புகிறோம். ஒரு அருமையான வேத வசனம் சொல்லுகிறது:

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:6,7).**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப பிள்ளைகளே, இந்த வேத வசனங்களை மனதில் பதித்தவர்களாய், உங்களுக்கு ஒரு பிரச்சனை வரும்போது, ஜெபத்திலே மாத்திரம் தேவனுக்குத் தெரியப்படுத்தி, அவரிடமிருந்து ஜெயத்தை, அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்! வேதத்திலே பிரச்சனைகளுக்காக ஜெபித்து, ஜெயமெடுத்த அநேகரை நாம் பார்க்கிறோம். அதை இந்த மாதம் சுருக்கமாக தியானிப்போம்:

### 1) யாக்கோபின் ஜெபம்:

**"உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" (யாக்கோபு 5:13).**

இன்று அநேகர் தங்களுடைய பிரச்சனைகளை, போராட்டங்களை மேற்கொள்ள, எப்படி ஜெபிப்பது? என்று கேட்கிறார்கள். யாக்கோபு ஜெபித்த ஜெபம், வேதத்தில் ஆதியாகமம் 32:1-12 வரையுள்ள வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. அவர் தேவனோடு போராடி ஜெபித்தார். பதில் கிடைக்கும் வரை அவர் கர்த்தரை விடவில்லை. யாக்கோபு



ஜெபிக்கும்போது, "நீர் சொல்லியிருக்கிறீர்" என்று வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டி ஜெபிக்கிறார். ஜெபித்ததின் பலன், தேவன் அவருக்கு தயை செய்தார். நான் வெறும் கோலும், கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன். இப்பொழுது இரண்டு பரிவாரங்களை உடையவனாக கடந்துவர தேவன் கிருபை செய்தார் என்று சொல்லுகிறார் (ஆதியாகமம் 32:10). அதுபோல இதை வாசிக்கிற, வாலிப பிள்ளைகளே, ஆண்டவர் உங்களுக்கும் செய்வார்! ஆகவே, யாக்கோபைப் போல ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

## 2) ஈசாக்கின் ஜெபம்:

**"ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான்" (ஆதியாகமம் 24:63).**

ஜெபிப்பதற்கென்று ஒவ்வொருவரும் ஒரு நேரத்தை தேர்வு செய்கின்றனர். அதிகாலை அல்லது இரவு. ஈசாக்கு தேவனோடு உறவாட மாலை வேளையை தெரிந்துகொண்டான். ஈசாக்கின் ஜெபம், அவன் தாயை இழந்த துக்கத்தை மறந்து, அழகான ஒரு மனைவியை சுதந்தரித்துக்கொண்டு ஆறுதலோடு சந்தோஷமாக வாழ வழி செய்தது. அந்த தேசத்திலே அவன் நூறு மடங்கு பலன்களை, ஆசீர்வாதங்களைப் சுதந்தரித்துக்கொள்ளச் செய்தது. )(ஆதியாகமம் 26:12,13). எனக்கு அருமையான வாலிப பிள்ளைகளே, உங்களுடைய வாழ்விலும் தோல்வி, ஏமாற்றம், நல்ல காரியங்கள் தடைபட்டிருந்தால், ஆண்டவரிடம் எப்படி ஈசாக்கு ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டானோ, அப்படியே நீங்களும் அவர் முகத்தை நோக்கிப் பார்த்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, உங்களை அர்ப்பணியுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வு செழிக்கும்!

## 3) மோசேயின் ஜெபம்:

**"அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்" (எண்ணாகமம் 12:13).**

ஜெபத்தில் பல பகுதிகள் உண்டு. கண்ணீரின் ஜெபம், ஸ்தோத்திர ஜெபம், மன்றாட்டு ஜெபம். ஆனால் கெஞ்சும் ஜெபத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் மோசேதான். தாய்மார்கள் குழந்தைக்கு சோறு ஊட்டும்போது கெஞ்சி, கெஞ்சி ஊட்டுவதைப் பார்த்திருக்கிறோம். பிள்ளைகள் அடம் பிடித்தாலும், தாயின் கெஞ்சலைப் பார்த்து, சாப்பிட ஆரம்பிக்கும். மிரியாம் தன் சகோதரனாகிய மோசேக்கு விரோதமாக பேசியதால், ஆண்டவர் அவளுக்கு குஷ்டரோகத்தை வரப்பண்ணினார். அதைக் கண்டு மோசே கோபம்கொள்ளாமல் அவளுக்காக கெஞ்சி ஜெபிக்கிறான். இந்த ஜெபம் கர்த்தருடைய இருதயத்தை உருக்கிற்று. ஆண்டவர் அவளை குணமாக்கினார். எவ்வளவு அருமையான ஆண்டவர் பாருங்கள்! நாமும், நம்முடைய பிரச்சனைகள், நோய்கள், வேதனைகளுக்காக கெஞ்சி ஜெபிக்கும்போது ஆண்டவர் நிச்சயம் உங்களுக்கு இரங்குவார்! உங்களையும் குணமாக்குவார்!



ஆண்டவர் சிலுவையில் தொங்கும்போது கூட, தன்னை சிலுவையில் அறைந்தவர்களை, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது என்னவென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்தார் (லூக்கா 23:34). என்னே ஆண்டவருடைய அன்பு பாருங்கள்! எனக்கன்பான வாலிப பிள்ளைகளே, அந்த அன்பான ஆண்டவரைப் பற்றிக்கொள்ளுங்கள். ஜெபித்து ஜெயம் எடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

## ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற வாலிப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் நான் கண்ணீரோடு ஜெபிக்கிறேன், ஆண்டவரே, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாரங்களை, கவலைகளை உம்மீது வைத்து, ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கவும், அதிக நேரம் காத்திருந்து ஜெபிக்கவும் அருள்செய்யும்! இந்த லெந்து காலங்களில், உம்மை உறுதியாய் பிடித்துக்கொண்டு வாழ கிருபை செய்யும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.


MARCH
06
Saturday
9:30 AM to
2:00 PM
ANBARIN PAATHATHIL ORU NAAL
அன்பரின் பாதத்தில்
ஒருநாள்
LIVE STREAMING ON
Evg.T.Stephen
godsloveministries.co.in
LIVE TELECASTING ON
ARK
Thuthi
VENUE
BKN AUDITORIUM.
5/6, RITHERDON RD, VEPERY,
(ANITHA MATRICULATION SCHOOL)
CHENNAI, 600007
PRAISE & WORSHIP
PAS.LEO
NELSON
WORD OF GOD
EVG.T.STEPHEN


மார்ச்
13
சனிக்கிழமை
காலை 9 மணி
முதல் மதியம் 3
மணி வரை
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
நடத்தும்
உபவாச ஜெபம்
இடம்:
வானத்தின் வாசல்
எழுப்புதல் ஜெப மையம்.
செம்பட்டி(திண்டுக்கல்)
சகோதரர்
L.வின்சென்ட் ராஜ்
தொடர்புக்கு 9442800447 | 9442800449
தேவ செய்தி
சகோதரர்
T.ஸ்டீபன்


கெத்செமனே பூரண சுவிசேஷ சபை
நடத்தும்
அற்புத மாலை
மார்ச் 20,21
சனி,ஞாயிறு தினமும் மாலை 6 மணிக்கு
இடம்: கெத்செமனே பூரண சுவிசேஷ சபை
40C, அப்பர் சாமி கோவில் தெரு, தேரடி,
பழைய கோர்ட் அருகில், திருவெற்றியூர், சென்னை 600019.
தொடர்புக்கு GFGC . 9940481154 | 044-25734648
சிறப்பு தீர்க்கதரிசன செய்தி
தீர்க்கதரிசி சகோ.T.ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள்
அப்போஸ்தலர்
விக்டர் ராஜாமணி
கெத்செமனே பூரண சுவிசேஷ சபை

# தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

## தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை**

Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

**அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை**

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

**ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை**

Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

**ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை** Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

**ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை**

Kanniyakumari - TCCL 181 | Airtel XStream Set top box

**கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை**

Tamilnadu - TCCL 734

**நித்யம் டிவியில் தினமும் இரவு 9.30 முதல் 10.00 வரை**

Tamilnadu, Andhra, Karnataka, Singapore, Malasiya, Canada, USA, UK, Australia

TCCL 728 I Aadhar 528 I Apple 528 I Amn 728

**வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை**

Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

**ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை** Chennai - Crystal 160



# வாரந்தோறும்

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறுதோறும்** | Angel TV<br>12.00 AM<br>12.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 1.30 PM 2.00 PM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **திங்கள்தோறும்** | Angel TV<br>5.00 AM<br>5.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM \| 1.30 PM 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | நம்பிக்கை<br>7.30 AM<br>8.00 AM<br>Satellite Channel |
| **செவ்வாய்தோறும்** | Angel TV<br>5.00 AM 5.30 AM \| 9.00 PM 9.30 PM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM \| 1.30 PM 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,<br>VK Digital 117, Digcon 85, | |
| **புதன்தோறும்** | Angel TV<br>8.00 AM<br>8.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM \| 1.30 PM 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **வியாழன்தோறும்** | ஹெவன் HEAVEN TV INDIA<br>8.30 PM<br>9.00 PM<br>TamilNadu | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 1.30 PM 2.00 PM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | SUBHAVAARTHA TELEVISION<br>7.30 AM<br>8.00 AM<br>Satellite Channel |
| **வெள்ளிதோறும்** | Angel TV<br>8.00 AM<br>8.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 1.30 PM 2.00 PM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **சனிதோறும்** | KING of GLORY<br>7.30 PM<br>8.00 PM<br>Pondicherry | Living Jesus Tv<br>7.30 AM 8.00 AM \| 1.30 PM 2.00 PM \| 8.30 PM 9.00 PM \| 10.30 PM 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |

**ANGEL TV DETAILS ( Satellite Channel )**

**SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815**

# எங்கள் சேவைகள்




## 24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

**044 2454 7999**
**99419 50999**

## மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ. T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

prayer@godsloveministries.co.in

**சமூக வலைத்தளம்:**

**Evg.T.Stephen**

**9841040999**


Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

**தேவனின் அன்பு ஊழியங்கள்**

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை – 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in